வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 21.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

3 நாடுகளுக்கான பயணத்தின் இறுதி கட்டமாக கயானா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை, கயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

இந்தியா தற்போது, உலக வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவே மேம்பட்டு உள்ளதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று காரைக்காலில், காரைக்கால் மகளிர் மாநாட்டையும், பெண்களுக்கான பல்வேறு திட்டங்களையும், தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, கியான் கும்ப் என்னும் 3 நாள் தேசிய கல்வியியல் மாநாடு, புதுச்சேரியில் இன்று தொடங்கி உள்ளது.

---

*மோடி-கயானா* 1 (16)

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, கயானா நாட்டின் மிக உயரிய தேசிய விருதான, ஆர்டர் ஆஃப் எக்சலன்ஸ் விருது வழங்கப் பட்டுள்ளது. கயானா அரசு மாளிகையில் நடைபெற்ற விழாவில், அந்நாட்டு அதிபர்

டாக்டர் முகமது இர்ஃபான் அலி, பிரதமருக்கு இந்த விருதை வழங்கி சிறப்பித்தார். இந்திய மக்களுக்கும், இருநாடுகளுக்கும் இடையிலான, நீண்டகால மக்கள் நிலைத் தொடர்புகளுக்கும், இந்த கவுரவத்தை தாம் அர்ப்பணிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். கயானா நாட்டிற்கான தமது அரசு முறைப் பயணம், இந்தியா-கயானா நட்புறவை மேலும் ஆழப்படுத்துவதில் இந்தியாவிற்கு உள்ள உறுதிப்பாட்டிற்கு சான்றாகும் என்றும் அவர் கூறியுள்ளார். கயானாவுடன், எல்லா துறைகளிலும் ஒத்துழைக்க இந்தியா தயார் என்றும், இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு, தெற்குலக நாடுகளுக்கே நல்லது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, கயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார். கயானா, மற்றும், கரீபியன் பிராந்தியததைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களையும், கயானாவில் உள்ள இந்திய வம்சாவளியினரையும், அவர் சந்தித்து கலந்துரையாடுவார்.

*மோடி-கயானா* 2 (11)

பிரதமர் நேற்றிரவு ஜார்ஜ்டவுனில், 2ஆவது இந்தியா-கேரிகாம் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். கயானா, டொமினிக்கா, சுரினா, பார்படோஸ், பஹாமாஸ் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை, இருதரப்பு ரீதியிலும் அவர் சந்தித்து பேசினார். பிரதமருக்கும், கயானா அதிபருக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, சுகாதாரம்,

வேளாண்மை, ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக, இருநாடுகளுக்கும் இடையே, 10 உடன்பாடுகள் கையெழுத்தாயின.

கயானாவில் இந்தியர்கள், கடந்த 180 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதும், கயானாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 40 சதவிகிதம், இந்திய வம்சாவளியினர் என்பதும், குறிப்பிடத்தக்கது.

--------------------------------

*ராஜ்நாத் 1 (16)*

சிக்கலான சர்வதேச பிரச்சனைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதையே இந்தியா ஆதரித்து வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். எல்லைப் பிரச்சனை முதல், வர்த்தக உடன்பாடுகள் வரை, எல்லா சவால்களுக்கும் இது பொருந்தும் என, அவர் இன்று, லாவோஸ் நாட்டின் வியன்டியன் நகரில், ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையிலான கூட்டத்தில் பேசுகையில் கூறினார். உலக நாடுகள் திறந்த மனதுடன், மற்றவர்களின் கருத்துக்களையும் மதித்து, அமைதியான முறையில் ஆக்கப்பூர்வ பேச்சு வார்த்தை நடத்தினால்தான், உலக அளவிலான பிரச்சனைகளுக்கு நீண்டகால தீர்வு காண முடியும் என்பதே இந்தியாவின் நம்பிக்கை என்றும், அவர் குறிப்பிட்டார். கடல்வழி, மற்றும் வான்வழி போக்குவரத்தில், உலக நாடுகளின் சுதந்திரத்தையும், உலக நாடுகளுக்கு இடையிலான சட்டப்பூர்வ வர்த்தகத்தில் தடைகள் நீக்கப்பட வேண்டும் என்பதையும்,

இந்தியா ஆதரிப்பதாக பாதுகாப்பு அமைச்சர் கூறினார். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் அமைதி, மற்றும், வளத்தை பராமரிப்பதில், சர்வதேச சட்டங்களை அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*ராஜ்நாத்* 2 (5)

நடப்பு 21ஆம் நூற்றாண்டு, ஆசியாவின் நூற்றாண்டு என பாதுகாப்பு அமைச்சர் கூறினார். குறிப்பாக ஆசியான் பிராந்தியம் பொருளாதார ரீதியில் துடிப்பான பகுதியாகவே இருந்து வருவதாகவும், ஆசியான் பிராந்தியத்தின் நம்பிக்கைகுரிய நன்பனாக இந்தியா திகழ்வதாகவும், அவர் குறிப்பிட்டார்.

--------------------------------

*கோயல்* (16)

இந்தியா கடந்த சில ஆண்டுகளில் ஈட்டிய நம்பிக்கை காரணமாக, தற்போது உலகின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவே மேம்பட்டு உள்ளதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஃபிக்கி தொழில்-வர்த்தகக் கூட்டமைப்பின் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்திய நிறுவனங்கள் தற்போது, உலக அளவிலான வர்த்தக சங்கிலியில் முக்கிய இடம் பிடித்து வருவதாகவும், பல்வேறு துறைகளுக்கான அரசின் திட்டங்கள், மற்றும், முன் முயற்சிகளே, மேம்பட்ட இந்த அந்தஸ்திற்கு காரணம் என்றும் கூறினார். தொழில் துறை

பிரதிநிதிகள், புதுமையாக்கம், மற்றும், ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்க வேண்டும் என, அமைச்சர் கேட்டுக் கொண்டார். புதுமையாக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை ஒன்று சேர்த்து, அவர்களின் ஆலோசனைகளை பெற, ஃபிக்கி கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தியாவில் வர்த்தகம் புரிவதை எளிதாக்குவதில் தொழில் துறையினர் தாங்களே முன்வந்து பங்காற்ற வேண்டும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

--------------------------------

*பதவியேற்பு (8)*

மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியாக திரு. கே. சஞ்சய் மூர்த்தி, இன்று பதவியேற்றுள்ளார். புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். 2020ஆம் ஆண்டு முதல், தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியாக இருந்த திரு. கிரீஷ் சந்திர முர்முவிற்கு பதிலாக, திரு. சஞ்சய் மூர்த்தி, அண்மையில் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். முன்னதாக திரு. மூர்த்தி, மத்திய கல்வி அமைச்சகத்தில், உயர்க் கல்வித் துறைச் செயலராக பதவி வகித்தார்.

--------------------------------

*கைலாஷ் நாதன்* 1 (18)

காரைக்காலில், மாவட்ட நிர்வாகம் சார்பில், இன்று நடைபெற்ற காரைக்கால் மகளிர் மாநாட்டை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, எப்போதும் பெண்களை மதித்து, பெருமைபடுத்தி வருவதாகவும், நாட்டின் மிக உயரிய குடியரசுத் தலைவர் பதவியை வகிப்பவர் பெண் என்பதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் கூறினார். சந்திரயான் விண்கலம் நிலவில் தரை இறங்கிய இடத்திற்கு, சிவசக்தி என பெயர் சூட்டப் பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார். . நாரிசக்தி வந்தன் அபியான் என்னும் மத்திய அரசின் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவினால், மக்களவையில் பெண் உறுப்பினர் எண்ணிக்கை, 181ஆக உயரும் என்றும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது எல்லாத் துறைகளிலும், பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாகவும், பொருளாதார சுதந்திரம் பற்றிய பெண்களின் மனநிலை வலுவடைந்து வருவதாகவும், துணை நிலை ஆளுநர் கூறினார். உயர்கல்வியில் சேரும் பெண்களின் எண்ணிக்கையும், அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வில் வெற்றி பெறும் பெண்களின் எண்ணிக்கையும், அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார். மத்திய அரசின் டிஜிட்டல் இண்டியா திட்டத்தினால், பெண்களுக்கான வேலை

வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாகவும், வேளாண் தொழில்நுட்பத்தில் பெண்களுக்கு பயிற்சி அளிக்க, புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு தொடக்குவதாகவும் அவர் கூறினார்.

உலக மீனவர் தினத்தை ஒட்டி, காரைக்கால் மாவட்ட மீனவப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களையும், துணை நிலை ஆளுநர் தொடக்கி வைத்தார். பிரதமரின் கடல்பாசி வளர்ப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கான கடன் உதவித் திட்டம், நமோ ட்ரோன் சகோதரிகள் திட்டம், மற்றும், காரைக்கால் பெண்களுக்கான பிங்க் ஆட்டோ திட்டமும், இதில் அடங்கும்.

காரைக்கால் என்ஐடி உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற மகளிர் மாநாட்டின் தொடக்க விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. திருமுருகன், திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கரன், காரைக்கால் என்ஐடி இயக்குநர் டாக்டர் மகரந்த் மாதவ் கங்ரேக்கர், காவல் துறை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், காரைக்காலைச் பிறப்பிடமாக கொண்ட கடலூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் திருமதி சரண்யா, மற்றும், சாதனைப் பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

---------------------------------

*கியான் கும்ப்* 1 (16)

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி சபை, மற்றும், கல்வி-கலாச்சார மேம்பாட்டு அறக்கட்டளையுடன் இணைந்து, புதுச்சேரி பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, கியான் கும்ப் என்னும் 3 நாள் தேசிய கல்வியியல் மாநாடு, புதுச்சேரியில் இன்று தொடங்கி உள்ளது.

மாநாடு தொடங்குவதை குறிக்கும் வகையில் காலாபட்டில் நடைபெற்ற மாணவர் பேரணியை, சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், கல்வி-கலாச்சார மேம்பாட்டு அறக்கட்டளையின் தேசியச் செயலர் டாக்டர் அதுல் கோத்தாரி ஆகியோர், கொடியசைத்து தொடக்கி வைத்தார். தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டு, அடுத்த ஆண்டு பிப்ரவரி 5 முதல், 9ஆம் தேதி வரை, புதுடெல்லியில் நடைபெற உள்ள, WAVES என்னும், உலக ஒலி-ஒளி மற்றும் கேளிக்கை மாநாடு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

கியான் கும்ப் மாநாட்டின் ஒருபகுதியாக, புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் மாநாட்டு கூடத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, இந்தியப் பாரம்பரிய ஞானம் பற்றிய கண்காட்சியை, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் தொடக்கி வைத்தார். WAVES மாநாடு குறித்த

*கியான் கும்ப் 2 (17)*

தகவல்களை மக்களுக்கு வழங்கும் வகையில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம், இக்கண்காட்சியில், அரங்கு ஒன்றை அமைத்துள்ளது.

மாநாட்டின் முதல் நாளான இன்று, கொச்சி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நந்தகுமார் தலைமையில், பஞ்ச கோசம் பற்றிய அமர்வு ஒன்றும் நடைபெற்றது.

கியான் கும்ப் மாநாட்டின் போது, WAVES மாநாடு குறித்த சிறப்பு தொழில்நுட்ப அமர்வு ஒன்றும், வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. Create India சவால் போட்டியின் ஒருபகுதியாக, மாணவர்களுக்கான போட்டிகளும் இடம்பெற உள்ளன.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், கியான் கும்ப் மாநாட்டை நாளை முறைப்படி தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு.ரங்கசாமி, கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், புதுச்சேரி பல்கலைக் கழக பொறுப்பு துணைவேந்தர் டாக்டர் தரணிக்கரசு ஆகியோரும் விழாவில் பங்கேற்க உள்ளனர்.

கல்வி நிறுவனங்களில், இந்தியக் கல்வி முறையின் அமலாக்கம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து, அடுத்த 2 நாட்களில், இம்மாநாட்டில், பல்வேறு அமர்வுகள் இடம்பெற உள்ளன. இந்திய பாரம்பரிய ஞானத்தில், தென்னிந்தியாவின் பங்களிப்பு, சட்டக் கல்வி



மற்றும் நீதி வழங்கும் நடைமுறைகளில் இந்திய மொழிகளின் பயன்பாடு, நற்பண்புகளின் அடிப்படையிலான கல்வியின் முக்கியத்துவம் உள்ளிட்ட அம்சங்கள் இதில் அடங்கும்.

மாநாட்டின் நிறைவு விழாவில், உத்தராகண்ட் மாநில கல்வி அமைச்சர் திரு. தன்சிங் ராவத் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது.

--------------------------------

*புதுச்சேரி மீனவர் தினம்* (7)

உலக மீன்வள தினமான இன்று, புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி. ரமேஷ், மற்றும், மீனவர் சங்க பிரதிநிதிகளும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிங்காரவேலர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

--------------------------------

***மீன்வளம்*** (12)

நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில், உள்நாட்டு மீன்பிடி துறையின் பங்கு, கடல்சார் மீன்பிடி துறையை விட அதிகம் என்று, மத்திய மீன்வளம், பால்வளம், மற்றும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார். உலக மீன்வள தினமான இன்று, புதுடெல்லியில், நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், மீன்வளத் துறையின் நீடித்த வளர்ச்சியில், அரசு அதிக உறுதிப்பாடு கொண்டுள்ளதாக கூறினார். கடல்சார் மீன்வளம் பற்றிய 5ஆவது

கணக்கெடுப்பு அறிக்கையை அமைச்சர் இவ்விழாவின் போது வெளியிட்டார். மீன்பிடி துறைக்கான அரசின் கொள்கைகளை, முறையான தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளவும், சுறாமீன்களின் எண்ணிக்கையை பராமரிப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை, திறம்பட்ட முறையில் செயல்படுத்தவும் இதனால் ஏதுவாகும் என்று அவர்கூறினார்.

---------------------------------

*மஹாராஷ்ட்ரா* (10)

மஹாராஷ்டரா மாநிலத்தின் அனைத்து 288 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நேற்று நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், 65.11 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. இது கடந்த 30 ஆண்டுகளின் மிக அதிக அளவாகும். இம்முறை, அதிகபட்சமாக கோலாப்பூர் மாவட்டத்தில், 76.25 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ள நிலையில், பழங்குடியினர் அதிகம் உள்ள காட்சிரோலி மாவட்டத்தில், வாக்குப்பதிவு சதவிகிதம் குறிப்பிடத் தகுந்த அளவில் அதிகரித்து இருப்பதாகவும், இப்பகுதியில் நக்சல் பிரச்சனை குறைந்து, வளர்ச்சி, மற்றும், ஜனநாயகம் மீது, மக்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதற்கு இதுவே சான்றாகும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

3 நாடுகளுக்கான பயணத்தின் இறுதி கட்டமாக கயானா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை, கயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

இந்தியா தற்போது, உலக வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவே மேம்பட்டு உள்ளதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று காரைக்காலில், காரைக்கால் மகளிர் மாநாட்டையும், பெண்களுக்கான பல்வேறு திட்டங்களையும், தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, கியான் கும்ப் என்னும் 3 நாள் தேசிய கல்வியியல் மாநாடு, புதுச்சேரியில் இன்று தொடங்கி உள்ளது.